APPENDIX I

(*Vide* answer to Starred Question No- 326 on page 231)

(அ) இந்திய உணவு, வேளாண்மை, சமுதாய நல வளர்ச்சி கூட்டுறவு அமைச்சகம் இந்த மாநாட்டைக் கூட்டியது. சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகம் குறித்த மாநாடு 1968 ஜூன் 11-ம் நாள் நடைபெற்றது. கூட்டுறவு பற்றிய மாநாடு 1968 ஜூன் 12-ம் நாள் நடைபெற்றது. மாநாட்டில் கலந்துகொண்ட மாநிலங்கள், மைய அரசுக்குட்பட்ட மாநிலங்களின் பட்டியல் அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

(இ) மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) இந்திய அரசு மேற்சொன்ன தீர்மானங்களை மாநிலங்களுக்கு தெரிவித்தது. நான்காவது திட்டங்களைத் தயாரிக்கின்றபோது மாநாட்டின் தீர்மானங்களை கவனத்தில் கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டது. இம்மாநிலத்தில் அந்த முடிவுகள் அவ்வாறே கருத்தில் கொள்ளப் பட்டன.

விவர அறிக்கை.

கீழ்க்கண்ட மாநிலங்களும், மைய அரசுக்குட்பட்ட மாநிலங்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டன.

மாநிலங்கள்.

1 ஆந்திரப் பிரதேசம்.
2 அசாம்.
3 பீகார்.
4 குசராத்.
5 அரியாணு.
6 சம்மு-காசுமீரம்.
7 கேரளம்.
8 மத்தியப் பிரதேசம்.
9 தமிழ் நாடு.
10 மகாராட்டிரம்.
11 ஒரிசா.
12 மைசூர்.
13 பஞ்சாபு.
14 ராஜஸ்தான்.
15 உத்திரப் பிரதேசம்.
16 மேற்கு வங்காளம்.

மைய அரசுக்குட்பட்ட மாநிலங்கள்.

1 டில்லி.
2 கோவா.
3 இமாசல நாடு.
4 மணிப்பூர்.
5 பாண்டிச்சேரி.
6 திரிபுரம்.

சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகத் திட்டங்களின் வருங்காலச் செயல் முறையும் அமைப்பும்.

1966 அக்டோபரில் நடைபெற்ற சமுதாய நல வளர்ச்சி , ஊராட்சி நிர்வாக மாநில அமைச்சர்கள் மாநாடு பரிந்துரைத்த சமுதாய நல வளர்ச்சி குறித்த வரைவுக் கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகம் குறித்த கொள்கையின் அணுகு முறைகளைப் பொதுவாக ஒப்புக்கொள்கையில், 1968 ஜூன் 11-ம் நாளன்று சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகம் ஆகியவற்றின் பொறுப்பில் உள்ள மாநில அமைச்சர்கள் மாநாடு வேளாண்மை உற்பத்தி உட்பட ஒருங் கிணைந்த கிராம வளர்ச்சிக்காக கீழ்க்கண்டவாறு தீர்மானித்தது :—

(1) சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகத் திட்டங்க தொடர்ந்து செயல்படவும், வலுப்படுத்தப்படவும் வேண்டும்.

31st March 1969]

(2) இன்னும் முதல் நிலையிலும், இரண்டாம் நிலையிலுமுள்ள வளர்ச்சி வட்டாரங்களுக்கு, அவற்றுக்குரிமையுள்ள நிதியுதவி தொடர்ந்து கிடைக்கும். ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு வளர்ச்சி வட்டாரங்களை மாற்றுவதற்கு ஐந்தாண்டுகள் என்று கால வரையறையை வரையறுத்துள்ள தற்போதுள்ள நடைமுறை விதி மன நிறைவு அளிப்பதாயில்லை. ஆய்வுக் குழு ஒன்று இது பற்றி முழுமையும் ஆராய்ந்து வளர்ச்சி வட்டாரம் ஒன்றின் குறிப்பிட்ட செயல் நிலையை முடிவு செய்வதற்கு மிகப் பொருத்தமான வழி முறைகளை வகுக்க வேண்டும். ஆனால், இரண்டாம் நிலைக்குப் பிந்திய வளர்ச்சி வட்டாரங்களுக்கும், மத்திய அரசும், மாநில அரசாங்கங்களும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளும் அடிப்படையில் இரண்டாம் நிலையிலுள்ளவாறு அதே மாதிரியில் நிதி உதவி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும். மாநிலத் திட்ட உயர் வரம்பிற்கு அதிகமாகவும் மேற்கொண்டும் மத்திய உதவி இருக்க வேண்டும். ஒரு வளர்ச்சி வட்டாரத்தில் அரிஜனங்கள், பழங்குடி மக்கள் இவர்களின் தொகைக்குத் தலைக்கு ரூ. 4 வீதமும், பிற வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தலைக்கு ரூ. 2 வீதமும் ஆண்டுதோறும் நிதியளிக்க வகை செய்யும் முறையை வகுக்கலாம் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி ஆராயப்படலாம்.

(3) பழங்குடி மக்களின் வளர்ச்சி வட்டாரங்களை குறித்து தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தை நிறைவேற்றுகையில் அவற்றிற்கு இது அளிக்கப்பட வேண்டும்.

(4) சமுதாயத்தின் பின்தங்கிய பிரிவினருக்கு, இது போன்றே போதுமான அளவிற்கு நிதிப் பங்கு ஒதுக்கப்பட வேண்டும். இப்பிரிவினருக்குச் சிறப்பாக எவ்வாறு உதவியளிக்கப்படலாமென்பது பற்றி ஆய்வுக் குழு ஒன்று ஆராய வேண்டுமென்னும் கருத்து மேலும் பரிசீலனை செய்யப்படலாம்.

(5) பல வளர்ச்சித் திட்டங்களை நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் இம் மாநில அரசாங்கம் அவசியமெனக் கருதுகிற அமைப்பு மாற்றங்கள், மாநிலத் தலைமையிடங்களில் செய்யப்படலாம். அது போன்றே வளர்ச்சி வட்டாரங்களின் அமைப்புகள், மாதிரியில் செய்யும் மாற்றங்கள், திட்ட வாய்ப்பையும் பகுதிக்குப் பகுதியுள்ள வேலைச் சுமையையும் கணக்கில் கொண்டு செய்யப்படலாம்.

(6) குறிப்பிட்ட ஒரு பகுதியில் போதுமான வேலையில்லாதிருக்கும் பணியாளர்கள் வேறு இடங்களில் வேலைக்கு அனுப்பப்படலாம்.

(7) அரசாங்க நிறுவனங்களுக்கும், அரசாங்கச் சார்பில்லாத செயல்களுக்கும் இடையில் நல்ல ஒருங்கிணைப்பு இருக்கும் வகையில் இம்மாநிலத்தில் உள்ள நிலைமைக்கு ஏற்பத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

(8) மக்களாட்சி அதிகாரப் பிரிவினைக்கொண்ட கருவியாக ஊராட்சி நிர்வாகம் அமைந்திருப்பதால், நிர்வாகத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பதோ அல்லது இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதோ அந்தந்த மாநிலங்களின் விருப்பத்திற்கு விட்டுவிடப்படுகிறது. கூடுதலான உள்ளூர் நிதி வாயில்களைப் பெருக்கிக்கொள்வதற்கு ஊராட்சி மன்றங்களுக்குத் தகுந்தவாறு ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். இது குறித்து மத்திய அரசாலும் மாநில அரசாங்கங்களாலும் இணை மானிய அடிப்படையில் அளிக்கப்பட வேண்டும்.

(9) ஊட்டச் சத்துணவு, கிராம உழைப்புச்சக்தி ஆகியவற்றின் சிறப்புத் திட்டங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்கப்பட வேண்டும்.

(10) குடும்ப நலத் திட்டப் பிரச்சாரப் பணி சமுதாய நல வளர்ச்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படலாம்.